சாட்சிய வாக்கு மூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)

1989 ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

( வன்கொடுமை தடுப்பு ) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,

திருவாரூர் - 610 001

தேதி: 21.01.2026

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | **122/2025** |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா-3 |
| சாட்சியின் பெயர் | : | அன்பரசன் |
| தந்தை பெயர் | : | பாலு |
| கிராமம் | : | புலவநல்லூர் |
| தாலுக்கா | : | திருவாரூர் |
| தொழில் | : | வெல்டிங் |
| வயது | : | 36 |

2026 ம் ஆண்டு ஜனவரி மாதம் 21 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் உதவியாளராக பணிபுரியும் திரு. G. சுப்பையன் அவர்களால் இந்த சாட்சிக்கு 1969 ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

1 முதல் 4 எதிரிகள் ஆஜர். அரசு வழக்கறிஞர் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**<u>முதல் விசாரணை</u>**

**1.** நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் மணக்கால் அய்யம்பேட்டையில் ஒரு வெல்டிங்கடையில் வேலை செய்து வருகிறேன்.

அ.சா.1 செல்வராஜ் என்பவரை தெரியும். ஆஜர் எதிரிகளை தெரியும். சுமார் 5, 6 மாதங்களுக்கு முன்பாக நான் வேலையை முடித்து விட்டு எனது சொந்த ஊருக்கு வந்தபோது, அ.சா.1 செல்வராஜின் வீடு எரிந்து விட்டது. அதை பார்த்து கொண்டு ஊர் மக்கள் இருந்தார்கள். நானும் அதை போய் வேடிக்கை பார்த்தேன். போலீசார் என்னை விசாரிக்கவில்லை. போலீசாரிடம் நான் கையெழுத்து எதுவும் போடவில்லை. என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள கையெழுத்து என்னுடைய கையெழுத்து அல்ல.

(இந்த சாட்சி அரசு தரப்பு வழக்கினை அனுசரித்து சாட்சியம் அளிக்கவில்லை என்பதால் இந்த சாட்சி குறுக்கு விசாரணையில் கேள்விகள் கேட்பது போல் இந்த சாட்சியிடம் கேள்விகள் கேட்க அனுமதிக்கவேண்டுமென அரசு தரப்பு வழக்கறிஞர் வாய்மொழியாக கேட்டுகொண்டதன் அடிப்படையில் அனுமதி வழங்கப்படுகிறது.)

**அரசு தரப்பு சாட்சி விசாரணை தொடர்ச்சி**

கடந்த 05.06.2025-ம் தேதி காலை 11.15 மணியளவில் மணக்கால் அய்யம்பேட்டை பருத்தி கொல்லை தெருவில் உள்ள அ.சா.1 செல்வராஜ் வீட்டின் அருகில் நன்னிலம் உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளர் ஒரு வீடு எரிந்ததை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்தார் என்றும், அந்த பார்வை மகஜரில் நானும், சத்தியராஜ் என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தோம் என்றும், மேற்படி வீட்டிலிருந்து எரிந்தும், எரியாத நிலையில் உள்ள கீற்றின் பாகம் ஒன்றையும், 80 செ.மீ நீளமுள்ள எரிந்தும், எரியாத நிலையில் உள்ள மூங்கில் கட்டை ஒன்றும், மின்விசிறியில் உள்ள 3 இறக்கைகள் வளைந்துள்ள நிலையிலும், தமிழ்நாடு அரசு மடிக்கணினி எரிந்தும், எரியாத நிலையில் உள்ளது ஒன்றும், ஆகியவற்றை போலீசார் கைப்பற்றியதாகவும், அதில் நானும், சத்தியராஜ் என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தோம் என்றும், பின்னர் போலீசார் விசாரணை செய்தபோது இது தொடர்பாக வாக்குமூலம் அளித்துள்ளோம் என்றும் சொன்னால் சரியல்ல. தற்போது

எதிரிகளை காப்பாற்ற வேண்டி உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>:** இல்லை.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2026.01.21 18:19:07 +0530

அமர்வு நீதிபதி,

எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு

நீதிமன்றம், திருவாரூர்.